# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஏழாம் பத்து

## ஒன்பதாம் திருமொழி - கள்ளம் மனம்
## திருச்சிறுபுலியூர்

** கள்ளம் மனம் விள்ளும் வகை * கருதிக் கழல் தொழுவீர் *
வெள்ளம் முது பரவைத் * திரை விரிய ** கரை எங்கும்
தெள்ளும் மணி திகழும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து
உள்ளும் * எனது உள்ளத்துள்ளும் * உறைவாரை உள்ளீரே 1

தெருவில் திரி சிறு நோன்பியர் * செஞ்சோற்றொடு கஞ்சி
மருவி * பிரிந்தவர் வாய் மொழி * மதியாது வந்து அடைவீர்! **
திருவில் பொலி மறையோர் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
உருவக் குறள் அடிகள் * அடி உணர்மின் உணர்வீரே 2

பறையும் வினை தொழுது உய்மின் நீர் * பணியும் சிறு தொண்டீர்! *
அறையும் புனல் ஒருபால் * வயல் ஒருபால் பொழில் ஒருபால் **
சிறை வண்டினம் அறையும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து
உறையும் * இறை அடி அல்லது * ஒன்று இறையும் அறியேனே 3

வானார் மதி பொதியும் சடை * மழுவாளியொடு ஒருபால் *
தான் ஆகிய தலைவன் அவன் * அமரர்க்கு அதிபதியாம் **
தேனார் பொழில் தழுவும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து
ஆன் ஆயனது * அடி அல்லது * ஒன்றறியேன் அடியேனே 4

நந்தா நெடு நரகத்திடை * நணுகா வகை * நாளும்
எந்தாய்! என * இமையோர் தொழுதேத்தும் இடம் ** எறி நீர்ச்
செந்தாமரை மலரும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
அந்தாமரை அடியாய்! * உனது அடியேற்கு அருள் புரியே 5

முழு நீலமும் மலர் ஆம்பலும் * அரவிந்தமும் விரவி *
கழுநீரொடு மடவார் அவர் * கண் வாய் முகம் அலரும் **
செழுநீர் வயல் தழுவும் * சிறுபுலியூர்ச் சலசயனம் *
தொழு நீர்மையது உடையார் * அடி தொழுவார் துயர் இலரே 6

** சேய் ஓங்கு * தண் திருமாலிருஞ்சோலை மலை உறையும்
மாயா! * எனக்கு உரையாய் இது * மறை நான்கின் உளாயோ? **
தீ ஓம்பு கை மறையோர் * சிறுபுலியூர்ச் சலசயனத்து
ஆயோ? * உனது அடியார் மனத்தாயோ? * அறியேனே 7

மை ஆர் வரி நீலம் * மலர்க் கண்ணார் மனம் விட்டிட்டு *
உய்வான் உன கழலே * தொழுது எழுவேன் கிளி மடவார் **
செவ்வாய் மொழி பயிலும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
ஐவாய் அரவணை மேல் * உறை அமலா! அருளாயே 8

** கரு மா முகில் உருவா! * கனல் உருவா! புனல் உருவா! *
பெரு மால் வரை உருவா! * பிற உருவா! நினதுருவா! **
திருமாமகள் மருவும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
அருமாகடல் அமுதே! * உனது அடியே சரணாமே 9

** சீரார் நெடு மறுகில் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
ஏரார் முகில்வண்ணன் தனை * இமையோர் பெருமானை **
காரார் வயல் மங்கைக்கு இறை * கலியன் ஒலி மாலை *
பாரார் இவை பரவித் தொழப் * பாவம் பயிலாவே 10

**அடிவரவு:** கள்ளம் தெருவில் பறையும் வான் நந்தா முழு சேயோங்கு மையார் கரு சீரார் பெரும்புறம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**